ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

**திருவரங்கப்பெருமாள் அரையர் - வருஷ திருநட்சத்திரம் - வைகாசி – கேட்டை**



திருவரங்கப்பெருமாள் அரையர் - அவதாரஸ்தலம்

## தனியன்

ஸ்ரீராமபதபங்கஜ ஸஞ்சரீகம் ஸ்ரீயாமுநார்ய வரபுத்ரமஹம் குணாப்யம் /
ஸ்ரீரங்கராஜகருணாபரிணாம தத்தம ஸ்ரீபாஷ்யகார சரணம் வரரங்கமீடே //

## வாழித்திருநாமம்

நாதமுனிகுலந்திகழ நன்குதித்தோன் வாழியே
நற்றமிழின் மறைக்கிசையை நவின்றுரைப்போன் வாழியே
காதலரங்கேசரிருகழல் பணிபோன் வாழியே
கானவரநயவிசையால் களிப்பிப்போன் வாழியே
ஏதமில் வண்கச்சியினை ஏத்திசைப்போன் வாழியே
எதிபதியைப் பரிசாகவேற்று வந்தோன் வாழியே
தீதில் யமுனைத்துறைவன் சேவடியோன் வாழியே
திருவரங்கப்பெருமாள் அரையர் திருவடிகள் வாழியே

அவதாரஸ்தலம் - திருவரங்கம்
திருநாமங்கள் - திருவரங்கப்பெருமாள் அரையர், ரங்கார்யர்
பாட்டனார் - ஸ்ரீமந் நாதமுனிகள் ; திருத்தகப்பனார் - ஆளவந்தார் ; திருத்தாயார் - ஸ்ரீரங்கநாச்சியார் ; திருத்தம்பிகள் - தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டைநம்பி
ஆசார்யர் - மணக்கால்நம்பி ; சிஷ்யர் - எம்பெருமானார்

## இவர் அருளியுள்ள திருமாலை தனியன்

மற்றொன்றும் வேண்டா மனமே!. மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலணைக்கீழ் - உற்ற
திருமாலை பாடும் சீர்த்தொண்டரடிப்பொடி யெம்
பெருமானை. எப்பொழுதும் பேசு.

## இவர் அருளியுள்ள திருப்பள்ளியெழுச்சி தனியன்

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்டரடிப்பொடி தொன்னகரம - வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானை. பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்தவூர்.

## திருவரங்கப்பெருமாள் அரையருக்கு ஆளவந்தாரின் உபதேசங்கள்

ஆளவந்தார் திருநாடு எழுந்தருளுவதற்கு முன் நோய்வாய்பட்டிருக்கும் பொழுது அவர் சிஷ்யர்களில் முதல்வர்களான திருக்கோஷ்டியூர் நம்பியும், பெரியநம்பியும் திருவரங்கப்பெருமாள் அரையரை முன்னிட்டுக் கொண்டு ஆளவந்தாரை திருவடிகளை வணங்கி தஞ்சமாய்யிருப்பதற்கு ஒரு வார்த்தை அருளிச்செய்ய

வேண்டும் என்று வேண்டினர். அதற்கு அவர் `பெரியபெருமாள் திருவடிகளின் கீழே யாழும் கையுமாய் சேவித்து நிற்கும் திருப்பாணவாழ்வாருடைய விக்ரஹத்தை சேவித்து வாருங்கள். பெரியபெருமாளுடைய உயர்நிலையை அறிந்துள்ள திருப்பாணழ்வாரே உபாயமும் உபேயமும் ஆவார்' என்று அருளிச்செய்தார். மேலும் `ஜீவாத்மாவுக்கு பாரதந்த்ரியமே ஸ்வரூபம் என்பதையும், அநந்யார்ஹ சேஷத்தவத்தையும், ஆசார்யாபிமானமே உத்தாரகம்' என்பதையும் விளக்கினார்.

ஆளவந்தார் திருவரங்கப்பெருமாள் அரையரிடம் திருக்கோஷ்டியூர் நம்பியையும், பெரியநம்பியையும் நன்றாக கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்தார். எம்பெருமானாருக்கு பெரியபெருமாள் திருவடிகளிலே ஒடுங்கியிருக்கும் பாண்பெருமாள் விக்ரஹத்தின் ரகசியத்தை தெரிவிக்கும்படி கூறினார். (அந்த விக்ரஹம் இக்காலத்தில் இல்லை). பிறகு அரையர் எம்பெருமானாருக்கு இந்த ரகசிய அர்த்தங்களை ப்ராஸாதித்தருளினார். ஆளவந்தார் சரமகைங்கர்யங்கள் அனைத்தையும் சிஷ்யர்கள் துனைகொண்டு இவரே செய்து முடித்தார்.

<u>திருவரங்கப்பெருமாள் அரையர் உடையவரை திருவரங்கத்திற்கு அழைத்து வருதல்</u>

இளையாழ்வார் காஞ்சீபுரத்தில் ஸந்யாஸாச்ரமத்தை ஏற்றார் என்று கேள்வு உற்ற ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகள் மிக்க மகழ்ச்சியடைந்தனர். அவர்கள் நம்பெருமாள் ஸந்நிதிக்குச் சென்று இளையாழ்வார் தேவரீர் ஸந்நிதியில் நித்யவாஸம் பண்ணும்படி இங்கே அழைப்பித்துக்கொண்டருளவேணும் என்று விண்ணப்பம் செய்தனர். பெரியபெருமாளும் பேரருளாளர்க்கு அப்போதே திருமுகம் போகவிட்டருள பேரருளாளரும் கேட்டருளி தந்தம் அபிமாநத்தைப் புறம்பே போகவிடிலன்றே, நாம் நம்மிராமாநுஜனை எப்படி விடுவது என்று அருளிச்செய்தார். (நம் இராமாநுஜரை தர இயலாது என்று பேரருளாளர் கூறிவிட்டார்). இச்செய்தியை பெரியநம்பி முதலான முதலிகள் எல்லாரும் கேட்டு இனி அடுத்துச் செய்வது என்ன என்று தாங்களுக்குல்லே விசாரித்தருளி, தேவப்பெருமாள் பாட்டுக்குப்போர நல்லாயிருப்பார். ஆதலால் பல சிஷ்யர்கள் ஸ்ரீஆளவந்தாரின் இறுதி ஆசையை நிறைவேற்ற, தெய்வகானம் பாடுவதில் வல்லவரான திருவரங்கப்பெருமாள் அரையரை காஞ்சிபுரத்துக்கு அனுப்பி இளையாழ்வாரை அழைத்து வரவேண்டும் என்று பெரிய பெருமாளை வேண்டினர்.

பெரிய பெருமாளின் ஆனைப்படி திருவரங்கப்பெருமாள் அரையர் தேவப்பெருமாளை சென்று சேவித்து தெய்வீக திவ்ய ப்ரபந்தபாடலை பாடி அவரை மயங்க வைத்தார். இந்த தெய்வீக கானத்தை கேட்ட பெருமாளும் ப்ரீதராய் நாமும் நம்பெண்டுகள் ஒழிய நீர் வேண்டினதைத் தருகிறேம். அத்தை சொல்லிக்காணீர் என்று சொல்ல, அரையரும் இராமாநுஜரைக்காட்டி இவரை அடியேனுக்குத் தந்தருளவேணும் என்று விண்ணப்பம் செய்ய பெருமாளும் அப்போதே அறியப் பெற்றிலோமே!. இவரையொழிய நீர் வேண்டினதெல்லாம் தருகிறேம் கேளீர் என்று அருளிச்செய்தார். அரையரும் ராமன் இரண்டு விதமாய் பேசமாட்டான். தேவரீர் இரண்டு வார்த்தை அருளிச் செய்யலாமோ? பேரருளாளரும் இன்னாப்புடனே தந்தோம் கொண்டு போகலாகாதோ! என்று அருளிச்செய்தார். திருவரங்கப்பெருமாள் அரையரும் உடையவரைக் கையைப்பற்றி வாரும் என்ன உடையவரும் பேரருளாளனை

தண்டன் ஸமர்ப்பித்துத் திருவரங்கப்பெருமாள் அரையருடன் கோயிலுக்கு எழுந்தருளப்புறப்பட்டார். பெருமாளும் இவருக்கு விடை கொடுத்தருளினார்.

பின்பு உடையவரும் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் பார்த்தருளி மடமேபோய் நம்முடைய திருவாராதநப்பெருமாள் பேரருளாளனையும் மற்றும் உண்டான ஸம்பந்தங்களையும் கொண்டு வாருங்கோள் என்று அருளிச்செய்து மடமும்புகுராமல், அவர்களும் அப்படியே எழுந்தருளுவித்துக் கொண்டு வந்தவுடன், திருகச்சிநம்பிகளிடம் விடைபெற்று திருவரங்கத்து எழுந்தருளனார்.

<u>நம்பெருமாள் கோயிலுடைய பெருமாளரையர் என்று திருநாமம் சாற்றினார் *</u>

திருவரங்கப்பெருமாளரையர் ப்ரபுத்தராய் காநாதி வித்யைகளிலும் பகவத்ப்ராவண்யத்திலும் மிகுந்தவராய், திருமொழி, திருவாய்மொழித் திருநாள்களிலே அழகிய மணவாளப்பெருமாள் விபவாவதாரத்தில் செய்தருளின காரியங்களை நாடகமாத் திருக்கோலமடுக்குச்சாத்தி அபிநயித்து மிகவும் உகப்பிக்க, பெருமாளும் போரவுகந்தருளி `கோயிலுடைய பெருமாளரையர்' என்று திருநாமம் சாற்றி ஸகலவரிசைகளையும் (மரியாதைகளையும்) ஸாதித்தருளினார். திருவரங்கப்பெருமாளரையர் தொடக்கமாக அந்த வம்சஸத்தில் அவதரித்தவர்கள் **கோயிலுடைய பெருமாளரையர்** என்று அழைக்கப்பட்டுவருகிறார்கள்.

<u>அரையர் பெருமாள் நடையழகுக்கீடாகப் பாடுதல் *</u>

ஒரு காலவிஸேசக்ஷத்திலே, திருவூறல் மஹோத்ஸவத்திலே திருக்காவேரியிலும் நடைக்குப் பரியாயமான தோளுக்கினியான்மேலே புறப்பட்டருளி, அரையரை அழைத்து `நம் நடையழுகுக்கீடாகப் பாடும்' என்று அருளப்பாடுசாதித்தார். அவரும் இசையிலே ஏத்திக்கொண்டு வர கோயிலிலே எழுந்தருளினார்.

*இந்த இருவிருத்தாந்தங்களும் கோயிலொழுகு புத்தகத்தில் குறிபிடப்பட்டுள்ளது.

இளையாழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையரிடத்தில் சரமோபாயத்தை கேட்டல் - ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்

பெரிய நம்பி எம்பெருமானாரிடம் ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் பக்கலிலே சரமோபாய அர்த்த விஷேங்களை கேளும் என்று அருளிச்செய்தார். உடையவர் இதை பெறுவதற்காக அன்றுமுதல் அரையருக்கு உகப்பாகப் பால் அமுதுகாய்ச்சி சமர்பித்தும் திருவத்யயந காலங்களிலே அரையர் திருமேனிக்கு அநுருபமாக மஞ்சள் காப்பு அரைத்து ஸமர்பித்தும் வந்தார். ஒருநாள் மஞ்சள் காப்பு அரைத்து நீராடப் பண்ணுகிற காலத்தில் அது அவருடைய திருமேனிக்கு அநுகுலமாக இல்லாத இருக்கிறபடியை அவர் திருமுகமண்டல விகாரத்திலே கண்டு, அந்த மஞ்சகாப்பு பாத்திரத்தை ஒதிக்கி வைத்துவிட்டு, வேறு ஒரு பாத்திரத்தில் மஞ்சள் காப்பை அரைத்து அவர் திருமேனிக்கு பாங்காக சாத்தி நீராடப்பண்ணி அருளினார்.

என்னுடைய ஸர்வஸ்வத்தையும் (ஸர்வஸ்வம் - இவரிடம் ஆளவந்தார் சேமித்து வைத்திருந்த பஞ்சமோபாய நிஷ்டாரஹஸ்யம்) கொள்ளை கொள்ளவோ நீர் இப்படி செய்தது என்று அருளிச்செய்து, வாரீர் எம்பெருமானாரே! உமக்கு ஒரு சரம புருஷார்த்தம் சொல்லுகிறேம் கேளீர் என்று சொல்லி, தேவு மற்றறியாத ஸ்ரீமதுரகவிகளைப்போலே நீரும் குருவே மேலான ப்ரஹ்மம், தனம், காமம், ப்ராப்யம், கல்வி, ப்ராபகம் என்று இருந்து கொண்டு, தீமனங்கெடுத்தும், மருவித்தொழும் மனமேதந்தும், அறியாதன அறிவித்த ஆசார்யனே உபாயோ உபேயம் என்று இருக்கிறபடியால், ஆசார்யனே நேரே நடமாடும் பரமபுருஷன் இதில் ஐயமில்லை என்றும், பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து என்றும் சொல்லுகிறபடியே, உறங்கும் பெருமாள்தானே உலாவும் பெருமாளாய் வந்தார் என்றிரும் என்று சொல்லி பஞ்சபோபாய நிஷ்டையான சரமபர்வ அர்த்தவிசேஷத்தை ப்ரஸாதித்தருளினார்.

மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

<u>திருவரங்கப்பெருமாள் அரையரும் சாளக்கிராம மூர்த்தியும்</u>

திருவரங்கத்தில் பணி செய்துவந்த அரையர்களில் ஒருவருக்கு வயது அதிகமான காரணத்தால் கண் தெரியாமல் போய்விட்டது. அந்த அரையர் அடிக்கடி அடைக்காய் (வெற்றிலை பாக்கு) அமுது செய்வது வழக்கம். அவருடைய வெற்றிலைப் பெட்டியில் பாக்குகளுடன் சாளக்கிராம மூர்த்தியையும் எழுந்தருளப்பண்ணி வைத்திருந்தார்.

வெற்றிலை போடும் போது பாக்கு என நினைத்து சாளக்கிராமத்தை வாயில் போட்டுக் கொள்வார். இவ்வாறு பல நாட்கள் நடந்தன். இதைப் பார்த்த நண்பர் ஒருவர் ஏன் ஸ்வாமிந்! இப்படிச் செய்கீர். இது அபசாரமில்லையா? என்று கேட்டார். உடனே அவரிடம் இந்த சாளக்கிரமத்தைக் கொடுத்து இனி நீரே திருவாராதனம் செய்து வாரும் என்று கொடுத்தார்.

அவரும் சாளக்கிராமம் கிடைத்த மகிழ்ச்சியில் விசேஷமாக திருமஞ்சனம் முதலியன செய்து கோவில் ஆழ்வாரில் வைத்து வழிபட்டு வந்தார். ஒரு நாள் பெருமாள் அவர் கனவில் தோன்றி என்னை அரையிடமே சேர்த்து விடும். நீர் எவ்வளவோ அழகாகப் பூஜைகள் செய்தாலும் ஆழ்வார்களின் ஈரத்தமிழ் தோய்ந்த அவர் வாயில் நான் இருப்பதையே விருப்புகிறேன். என்னை அவரிடம் சென்று சேரும் என்று நியமித்தார். அவரும் அவ்வாறே செய்தார்.

## திருவரங்கப்பெருமாள் அரையர் செய்த கைங்கர்யங்கள்

திருவரங்கப்பெருமாள் அரையர் இசை நாடகங்களில் நல்ல பயிற்சி பெற்று வந்தார். திருமொழி திருவாய்மொழித் திருநாள்களில் அரையர் சேவையில் இவர் பல வேடங்கள் புனைந்து கொண்டு எம்பெருமான் உலகளந்தது, கடல் கடைந்தது, கம்சனை வதைத்தது முதலான அவதாரங்களை நாடகமாக நடித்துக் காட்டினார். அழகியமணவாளனும் மிகவும் மகிழ்நதருளி அவருக்கு **கோயிலுடைய பெருமாள் அரையர்** என்ற சிறப்புப் பெயரை வழங்கினான்.

## அரையர்களுக்குள்ள அருளப்பாடுகள்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள அரையர்களுக்கு கோயிலுடைய பெருமாளரையர், வரந்தரும் பெருமாளரையர், மதியாத தெய்வங்கள், மணவாளப் பெருமாள் அரையர், நாதவிநோத அரையர், விண்ணப்பாம் செய்வார், திருவாய்மொழி முழக்கம், இசையறியும் பெருமாள் கூட்டத்தார் என்கிற அருளப்பாடுகள் வழங்கபட்டு வருகின்றன.

## திருவரங்கத்தில் அரையர் சேவை ஏற்பட்ட வரலாறு

ஒரு காலத்தில் நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களை பயில்வாரும் பயில்விப்பாரும் இன்றிப் போயிற்று. இந்த நிலையில் தான் நாதமுனிகள் அவதரித்து நம்மாழ்வாரின் பாடல்களைத் தேடித் திருக்கூருக்குச் சென்றார். அங்கே அவர் மதுரகவியாழ்வார் அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற நூலைப் பக்தியுடன் நம்மாழ்வார் சந்நிதியில் உரக்கச்சொல்லி யோகத்தில் ஆழ்ந்தார். யோகநிஷ்டையில் நம்மாழ்வாரை தரிசித்து அவரிடம் இருந்து திருவாய்மொழியையும் மற்ற பிரபந்தங்களையும் உபதேசமாகப் பெற்றார். பிறகு அப்பிரபந்தங்களை தம் சீடர்களுக்கு ஓதுவித்து தமிழகத்தில் திவ்ய ப்ரபந்த பாசுரங்களை பிரசாரம் செய்தார். பாசுரங்களுக்கு பண்ணும் தாளமும் அமைத்தார். திருவாய்மொழித் திருநாளுக்கு முன்னதாக 10 நாட்களில் மற்ற ஆழ்வார்களின் திருமொழிகளையும் திருவாய்மொழித் திருநாளுக்கு மறுநாள் இயற்பா முழுவதையும் சேவிக்குபம்படி நியமித்தார். இயற்பா முழுவதையும் இசையின்றி இயலாகவே சேவிக்கப்பட்டது. தம் மருமகங்களான கீழயைகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்ற இருவருக்கும் பாசுரங்களைப் பண்ணுடன் கற்பித்து அவ்விருவரையும் அபிநயத்துடன் சேவிக்கும்படி நியமித்தார்.

## அரையர் சேவை

வைணவ திருக்கோயில்களில் எம்பெருமான் முன்பே நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்களைக் கையில் தாளம் ஏந்தி இசையுடன் பாடி அபிநயத்துடன் ஆடிப்பொருள் விளக்கம் செய்யும் ஒரு வகை கலை நிகழ்ச்சியே அரையர் சேவை எனப்படுகிறது. இத்தெய்வீகக் கலையின் வல்லவர்களைத் தான் அரையர்கள் என்று வழங்குகிறார்கள். இவர்களையே கல்வெட்டுகள் விண்ணப்பம் செய்வார் என்று குறிப்பிடுகின்றன. இத்தொடர் திருவாய்மொழி ஈடு உரையில் நம்பிள்ளையால் கையாளப்பட்டு உள்ளது. இக்கலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கோயில் ஒழுகு, குருபரம்பரை, நாலயிர திவ்ய பிரபந்த வியாக்யானம் முதலிய நூல்களின் தூனை கொண்டு அறிய முடிகிறது.

## அரையர் என்னும் பெயர் வழங்கப்படுவதற்கான காரணம் என்ன?

களைக்களஞ்சியம் தொகுதி 1ல் பக்கம் 203ல் அரையரைப்பற்றி பின்வருமாறு காணப்படுகிறது:

நாதமுனிகள் என்ற பெரியார் திவ்ய பிரபந்த பாடல்களைக் கோவில்களில் ஒது வதற்கு ஏற்பாடு செய்தார். இசையுடன் இவற்றைப் பாடவும் அவற்றின் கருத்தைக் குறிப்பால் விளக்கும் அங்கச் செய்கைகளைக் காட்டி நடிக்கவும் தம்முடைய உடன் பிறந்தாள் மக்களான கீழயகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்னும் இருவரையும் பழக்கினார். (மேலையகத்தாழ்வான் என்கிற வரதாசார்யர் கிழையகத்தாழ்வான் என்கிற கிருஷ்ணமாசார்யர் என்று இரு மருக்கள் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு இருந்தனர்.)

அவர்கள் இசைச்சுவையிலே துவக்குண்டு காயக சார்வ பௌமர் என்னும் மேன்மை தோன்றும்படி அவர்களுக்கு அரையர் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, திருநாராயணபுரம் ஆகிய தலங்களில் இன்றும் அரையர் சேவை நடை பெற்று வருவதைக் காணலாம்.

## அரைசயர் சேவையின் தன்னேற்றம்

மார்கழி மாதம் பகல் பத்து இராப்பத்து திருநாட்களில் அரையர் சேவை சிறப்பாக நடைபெற்று வருகிறது. எம்பெருமானார், எம்பார் முதலான ஆசார்யர்கள் அரையர் சேவையின் போது அருகே அமர்ந்து கொண்டு கவனித்தனர். உடையவர் அரையர்களின் அபிநயத்தை கவனமாக பார்த்து உரிய திருத்தங்களைச் செய்தார். உடையவர் இயற்பாவை இசையின்றி திருவரங்கத்தமுதனாரை சேவிக்கும்படி செய்தார். உடையவர் சீடரான எம்பாரும் முத்தமிழ் வல்லராய் பல திருத்தங்களைச் செய்தார்.

நஞ்சீயர் காலத்தில் அரையர் சேவையில் பள்ளு என்ற இசைபாடும் நிகழ்ச்சியும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. நாதமுனிகள் காலத்தில் திருவரங்த்தில் மட்டுமே

அரையர் சேவை நடந்து வந்தது. உடையவர் காலத்தில் பிற திவ்ய தேசங்களிலும் தொடங்கப்பெற்றது.

## அரையர் கொண்டாட்டம்

பொய்கையார் போற்றும் பெருமாள், பூதத்தார் பரவும் பெருமாள், பதின்மர் பாடும் பெருமாள் என்று பலவாறாக பெருமாளை ஏத்துவதே (புகழ்ந்து பாடுவதே) கொண்டாட்டம் எனப்படும். மேலே குறிப்பட்டது போல் பல தொடர்கள் பூர்வாசார்யர்கள் காலத்தில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாக மணவாளமாமுனிகள் காலத்தில் நம்போத மணவாளமாமுனி ஈடுரைப்பது கேட்டுப் பூரித்து நின்ற பெருமாள் என்ற கொண்டாட்டத் தொடர் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மேலே சொன்ன விஷயங்கள் ஆழ்வார்திருநகரி ஆத்தான் ஸ்ரீ.உ.வே அப்பு சடகோபாசார்ய ஸ்வாமி எழுதியுள்ள அரையர் சேவை என்னும் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது.

திருவரங்கப்பெருமாள் அரையர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: